Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 255/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | வைஜெயந்தி | Calling: | விரிவாக்க அலுவலர் |
| Father's Name: | சம்பத்குமார் | Religion: | |
| Village: | வள்ளிப்பட்டு | Age: | 58 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 17.11.2025 நேரம் : 12.40 PM

(எதிரி ஆஜர் .)

அ.சா.1 முதன்மை விசாரணை

நான் வள்ளிபட்டில் குடியிருந்து ஆலங்காயம் சமூகநலத்துறையில் விரிவாக்க அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.03.2025 ம் தேதி ஆலங்காயம் சமூகநலத்துறையில் விரிவாக்க அலுவலராக பணியில் இருந்த போது கே.கே.கொட்டாய், வள்ளிப்பட்டு பஞ்சாயத்து, வெங்கடேசன் என்பவரின் மகள், 17 வயதுடையது சோபனா என்பவருக்கு விக்னேஷ் என்பவருடன் வளையாம்பட்டு முருகன் கோவிலில் திருமணம் நடந்ததாக மேற்படி சோபனாவின் வீட்டில் வைத்து கவுன்சிலிங் கொடுத்தோம். நேரில் சென்று ஆய்வு செய்தேன். இது சம்மந்தமாக வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. நான் கொடுத்த புகார் மனு அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய தகவல்களை தான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் வளையாம்பட்டு முருகர் கோவிலுக்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். அந்த முருகர் கோவிலை சுற்றி சி.சி.டி.வி கேமராக்கள் உள்ளதா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அந்த முருகர் கோவில் இந்து அறநிலைத்துறைக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த முருகர் கோவிலில் திருமணம் நடைப்பெற்றால் அந்திருமணங்களை ஒரு பதிவேட்டில் பதிவு செய்வார்கள் அதைப்பற்றி தெரியுமா என்றால் தெரியும். 25.03.2025 ல் மேற்படி சோபனா என்பவருக்கு திருமணம் நடந்தது பற்றி அந்த பதிவேட்டை ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. எதிரியும் சேபனாவும் காதலித்து வந்தார்களா என்றால் இல்லை. எதிரியின் குடும்பத்தாரும் சோபனா என்பவரின் குடும்பமும் உறவினர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி எதிரியின் குடும்பத்தாரும் சோபனா என்பவரின் குடும்பமும் உறவினர்களா என நான் விசாரணை செய்தேனா என்றால் செய்தேன், உறவினர் இல்லை என்று தெரியவந்தது. எதிரியின் திருமணப்பத்திரிக்கை ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. சோபனாவை விசாரிக்கும் போது திருமண பத்திரிக்கை போன்றவற்றை விசாரித்து காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சோபனாவை கே.கே. கொட்டாயில் விசாரிக்கும் போது அவருடைய கழுத்தில் தாலியும், காலில் மெட்டியும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் முதன்மை விசாரணையில் கூறியவாறு நான் சம்பவயிடம் சென்று விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, அந்த பெண் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் புகார் கொடுத்தேன். அந்த பெண் கொடுத்த வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த பெண்ணிற்கு திருமணம் ஆகவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் முருகர் கோவிலில் அவ்வாறு ஒரு திருமணமே நடக்கவில்லை என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. பெண்ணின் பெற்றோர்களை விசாரித்த விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். பெண்ணின் திருமணம் புகைப்படம் ஏதேனும் கைப்பற்றி போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொன்னவாறு எதிரிக்கும் அந்த பெண்ணிற்கும் திருமணம் நடக்கவில்லை

என்றாலும் எதிரியின் மீது ஒரு தவறான புகாரை கொடுத்திருக்கின்றேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) வைஜெயந்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.17 16:44:25 +0530